

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் நடைபெற்ற துறை வாரியாக மானியக் கோரிக்கைக் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர், என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கலந்துகொண்டு பேசினர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



மன்னார்குடி ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் சோம.ராஜேந்திரன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வில், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்று புகழஞ்சலி செலுத்தினார். பி. ராஜமாணிக்கம், ச.முரசொலி எம்.பி., ஏ. கே.எஸ்.விஜயன், வீரா. கணேசன், டி.எஸ்.டி.முத்துவேல்,நா.கவியரசு,கேவிகே ஆனந்த்,சித்தேரி சிவா,பொய்யாமொழி, தாய்.செந்தில் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

# ஒன்றியம் என்பதை மறந்து போன பா.ஜ.க.!

இந்திய அரசமைப்பின் முகப்புரை பொருளியல் நீதிக்கும் அரசியல் நீதிக்கும் முன்னதாக சமூக நீதியை தான் முதன்மைப்படுத்துகிறது. இது மதவாதம் என்ற சிறிய வட்டத்தில் சுழன்று கொண்டிருக்கும் பாரதிய ஜனதாவுக்கு தெரிய வாய்ப்பில்லை. அரசமைப்பு இயற்றப்பட்ட போது பழங்குடியினருக்கும் பட்டியல் இனத்தவருக்கும் சமூக நீதி உறுதிப்படுத்தப்பட்டது. தீண்டாமை கூடாது என்பதோடு மட்டுமின்றி சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை அரசமைப்பு நிலை நாட்டியது அனைவருக்கும் சம நீதி என்பது தான் சமூக நீதியின் அடிப்படை தத்துவம் என்பதை பாஜக இன்னும் தெரிந்து கொள்ள வில்லை.

இந்தியாவில் 1950-ஆம் ஆண்டு ஜனவரி 26-இல் அமலுக்கு வந்த அரசமைப்பு கூட்டாட்சிக்கான வரையறை என்று சொல்ல முடியாது. மாறாக மாநிலங்களை விட மத்திய அரசுக்கு அதிக அதிகாரம் பொறுப்பு இருக்குமாறு வகுக்கப்பட்டது. இதற்கு அப்போது சொல்லப்பட்ட காரணம் வலுவான மத்திய அரசு அமைய வேண்டும் என்பதுதான். அதற்கு அவர்கள் சொன்ன உதாரணம் இந்தியாவில் வலுவான ஆட்சி அமைப்பு இல்லாததால் தான் ஆங்கிலேயர் அதிகாரம் செய்ய நுழைந்தார்கள் என்பது. அப்போது நிலையான ஆட்சி என்பது தான் பேசும் பொருளாக இருந்தது. ஒரு கட்டத்தில் மாநிலங்களை மத்திய அரசு புறக்கணிக்கிறது பாரபட்சம் பார்க்கிறது என்பது சமூக நீதியை கொள்கையாகக் கொண்ட திமுகவுக்கு தெரியும் போது தான் ஆட்சி அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்ற குரலை தொடர்ந்து எழுப்பத் தொடங்கினார்கள். அப்பொழுது காங்கிரஸ் கட்சி அதிகாரம் செய்ய வேண்டும் என்பதற்காக நாங்கள் அதிகாரம் கேட்கவில்லை மக்களுக்கு சேவை செய்ய தான் அதிகாரம் கேட்கிறோம் என்று அதற்கு காரணங்களை சொல்ல தொடங்கி இருந்தார்கள்.



**எஸ். ரகுபதி**
**சட்ட அமைச்சர்**

மொழி அடிப்படையில் மாநிலத்தைப் பிரிக்க வேண்டும் என்று கோரிக்கை 60 -களிலேயே வரத் தொடங்கி விட்டது. தெலுங்கு பேசும் மக்களுக்கு தனி மாநிலம் வேண்டுமென்ற ஆந்திரர்களின் கோரிக்கையை காங்கிரஸ் தலைவர்கள் ஏற்றுக்கொண்டனர். இதுதான் மொழி அடிப்படையில் மாநிலங்களை உருவாக்கும் பெரிய ஆவலை தூண்டிவிட்டது. இதனை தொடர்ந்து தான் மத்திய அரசுக்கு எல்லா பிரச்சனைக்கும் தீர்வு தெரியும் மத்திய அரசு முடிவு எடுக்கும் என்பதை கேள்வி கேட்க தொடங்கினார்கள். பம்பாய் மாகாணத்தில் குஜராத் மொழிக்காரர்களுக்கும் மராட்டியர்களுக்கும் நாளுக்கு நாள் இடைவெளி அதிகமாகிக் கொண்டே வந்தது. இறுதியாக 1960-இல் பம்பாய் தலைநகரமாகக் கொண்டு மகாராஷ்டிரம் அகமதாபாத் தலைநகரமாகக் கொண்டு குஜராத் என்ற மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. பஞ்சாப் மாநிலத்தில் இந்தி பேசும் சீக்கியர் அல்லாத மக்கள் வசித்த பகுதிகளை தனியாகப் பிரித்து ஹரியானா என்ற மாநிலத்தை 1966-இல் உருவாக்கினார்கள். பிறகு வடகிழக்கு பகுதியில் அசாமில் இருந்து வெவ்வேறு மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அதன் பிறகு உத்திர பிரதேஷ், பீகார் போன்ற மாநிலங்களில் இருந்து உத்தரகாண்ட், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், இமாச்சலப் பிரதேஷ் மற்றும் அருணாச்சல பிரதேஷ் போன்ற மாநிலங்கள் பிரிந்தன. இந்தியாவில் பல்வேறுபட்ட மொழி பேசுபவர்கள் நிறைந்த ஒரு நாடு. பல்வேறு மொழி பேசும் மக்கள் இந்தியாவில் இருந்தாலும் இன்னும் நாம் கூட்டாட்சி முறையில் தான் ஆட்சி செய்கிறோம்..ஹிந்தி பேசாத மக்கள் இந்தி திணிப்பை அன்றும் சரி இன்றும் சரி விரும்பவில்லை.

உலகில் அதிக மொழிகள் பேசும் நாடுகளில் முதல் இடத்தில் இருப்பது இந்தியா தான். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு படி இந்தியாவில் பேசப்படும் முக்கிய மொழிகள் 123. சிறிய அளவில் பேசப்படும் மொழிகள் 19,500. இவை எல்லாமே இப்போது பேச்சு வழக்கில் இல்லை. நாம் இதுவரை 22 மொழிகளை அங்கீகரித்து இருக்கிறோம். இன்னும் 38 மொழிகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக நிலுவையில் இருக்கின்றது. இந்த 38 மொழியில் 11 மொழிகள் இந்தியில் சேர்க்கப் பட்டிருக்கின்றன. அதனால் தான் இந்தி பேசாத மக்கள் இந்தி ஒரு கலப்பின மொழி என்று சொல்வார்கள்.

போஜ்புரி என்ற ஒரு மொழி சுமார் 15 கோடி பேர் பேசுகிறார்கள். போஜ்புரி சினிமா தொலைக்காட்சி பத்திரிகைகள் எல்லாம் கூட வந்து விட்டன. உத்திரபிரதேசத்தில் பீகாரில் இப்போதும் போஜ்புரி பேசும் மக்கள் இப்போதும் நிறைய மக்கள் இருக்கிறார்கள். மொரிஷியஸ் நாட்டில் போஜ்புரி அங்கீகரிக்கப்பட்ட ஒரு மொழி. அங்கு இந்தியுடன் போஜ்புரி மொழியும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

மொழி மக்களின் உணர்வைத் தட்டி எழுப்பும் மொழியால் மக்களை ஒன்று திரட்ட முடியும் என்பதற்கு சரியான உதாரணம் பாகிஸ்தான். பாகிஸ்தானின் முதல் பிரதமர் முகமது அலி ஜின்னா பாகிஸ்தானுடன் இணைந்த வங்கதேசத்தை அன்றைய கிழக்கு பாகிஸ்தான் மக்களிடம் நீங்கள் வங்க மொழி பேச கூடாது உருது கற்றுக் கொள்ளுங்கள் என்றார். அப்போது ஏற்பட்ட எதிர்ப்பு தான் பின்னாளில் பங்களாதேஷ் உருவாக காரணமாக இருந்தது. மொழியை வைத்து ஒரு நாடு பிரிவினைக்கு தள்ளப்படும் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை.

மொழி மக்களிடையே பிரிவினையை விதைக்கவில்லை. பிறமொழி இன மக்களிடம் கலந்து பழகும் பண்பு இன்றும் தொடர்கிறது. வட இந்தியாவில் இருந்து வரும் பிறமொழி பேசும் குறிப்பாக இந்தி பேசும் பலருக்கு வாழ்வாதாரமே தமிழ்நாடு தான். மாதந்தோறும் அவர்கள் குடும்பத்தினருக்கு அனுப்பும் வங்கி பரிவர்த்தனை பத்தாயிரம் கோடியை தாண்டி இருக்கிறது. வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு என்பதற்கு இதைவிட உதாரணம் தேவை இல்லை. இதெல்லாம் பாரதிய ஜனதாவும் தெரிந்தும் தெரியாமல் இருப்பது போல் பாசாங்கு அரசியல் செய்கிறது. கூட்டாட்சி முறை நமக்கு அவசியம் என்பதற்கு காரணம் இந்தியாவில் பல்வேறு மக்கள் பல்வேறு மொழி கலாச்சாரம் என்ற வாழ்க்கை முறை தான்.

இந்தியாவில் உயர்கல்வி படிப்போர் எண்ணிக்கை 27 சதவீதம். ஆனால், மாநில அளவில் உயர்கல்வி படிப்போர் எண்ணிக்கை ஏற்றத்தாழ்வாகத்தான் இருக்கிறது. இந்தியாவிலேயே அதிக உயர் கல்வி படிக்கும் முதன்மை மாநிலமாக தமிழகம் இருக்கிறது. உயர்கல்வியில் தமிழ்நாடு 50 சதவீதத்தை தாண்டி இப்போது அதன் இலக்கு அமெரிக்காவுடன் போட்டி போடுகிறது உயர் கல்வி படித்தால் தனி நபர் வருமானம் அதிகரிக்கும் என்பதுதான் திராவிட மாடல் சித்தாந்தம். அதனால் தான் தளபதி அவர்கள் உயர்கல்வி படிப்போருக்கு பார்த்துப் பார்த்து சலுகைகளை வாரி வழங்குகிறார். உயர் கல்வியில் மிகவும் பின்தங்கிய மாநிலங்கள் என்று குறிப்பிட வேண்டும் என்றால் பீகார் மற்றும் உத்தர பிரதேசத்தை குறிப்பிட வேண்டும். இங்குதான் பாரதிய ஜனதா ஆட்சி நடைபெறுகிறது என்பதையும் நினைவுப் படுத்துகிறேன்.

சுதந்திர இந்தியாவில் முதல் 20, 25 ஆண்டுகள் பாராளுமன்ற நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் தான் இருந்தன. பாராளுமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்யும் கொள்கை குறிப்புகள் கூட ஆங்கிலத்தில் தான் இருந்தன. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை விவாதங்கள் ஆங்கிலத்தில் தான் நடந்தது. இன்னும் சொல்லப்போனால் ஹிந்தி பேசும் மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கூட பாராளுமன்ற விவாதங்களில் ஆங்கிலத்தில் தான் பேசியிருக்கிறார்கள். உண்மையில் இந்தி மொழிக்கு யாரும் எதிரியே இல்லை. தென்னிந்தியாவில் இந்தி பேசும் மக்கள் நிறைய பேர் தொழில் செய்கிறார்கள். அவர்களுக்கு இதுவரை எந்த அச்சுறுத்தலும் இல்லை. இதெல்லாம் தெரியாமல் பாஜக அரசு திணிப்புஎன்ற பெயரில் இந்தி மொழி மீது பிற மொழிக்காரர்கள் வெறுப்பு ஏற்படும் வகையில் பாஜகவின் நடவடிக்கை இருக்கிறது. இந்திக்கு இவர்கள் செய்யும் துரோகம் இதுதான்.

ஆனால் நமது முதல்வர் சாதனை முதல்வர் இது போன்ற இடர்பாடுகளை கண்டு கொள்ளாமல் சாதனை என்ற இலக்கை நோக்கி போய்க்கொண்டே இருக்கிறார். தமிழ்நாட்டின் வருமானம் ஒரு டிரில்லியன் இலக்கு என்று சொல்லி அந்த இலக்கை நோக்கி போய்க் கொண்டே இருக்கிறார். இப்படி பாஜக முதல்வர்கள் யாரும் சிந்திப்பதில்லை மதவாதம் என்ற சின்ன வட்டத்துக்குள் இப்போதும் சுழன்று கொண்டிருக்கும் இவர்களைப் பார்த்து நாம் பரிதாபம் தான் படுகிறோம். ஒன்றியம் என்பதற்கான விளக்கத்தை இவர்கள் தெரிந்து கொள்ளும் வரை இவர்கள் நடவடிக்கை பழைய பஞ்சாங்கம் ஆக தான் இருக்கும்.

## அரியலூர் மாவட்டம்

# கீழகாவட்டாங்குறிச்சியில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேச்சு!

*அரியலூர், மார்ச் 16 –*

அரியலூர் மாவட்டம் கீழகாவட்டாங்குறிச்சியில் தமிழ்நாடு முதலமைச்சரின் 72 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க. மாவட்டச் செயலாளரும் போக்குவரத்து துறை அமைச்சருமான சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.



அப்பொழுது இன்றைக்கு தமிழ்நாடு கல்வியிலே மேலே மேலே வந்து கொண்டிருப்பதை பார்க்கிறோம் கலைஞர் கொண்டு வந்த பெண் குழந்தைகள் படித்தால் உதவி தொகை தற்போதைய முதலமைச்சர் கொண்டுவந்த அரசு பள்ளியில் பயின்று கல்லூரியில் சேரும் பெண் குழந்தைகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் என திமுக அரசின் திட்டங்களால் 50% ஆக இருந்த கல்லூரியில் படிக்கும் பெண் குழந்தைகள் தற்போது 80 சதவீத பெண் குழந்தைகள் கல்லூரியில் பயின்று வருகின்றனர்.

இன்னும் 5 வருடத்தில் தமிழ்நாட்டிலே எல்லா பெண் குழந்தைகளும் 12 ஆம் வகுப்பு முடித்தால் கல்லூரி முடித்தவர்களாக இருப்பார்கள். இது இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கிடையாது கல்வி அறிவு வந்துவிட்டால் அவர்கள் எந்த தொழில் செய்தாலும் முன்னேற்றமடைவார்கள் என்பதற்காக தான் நமது முதலமைச்சர் படிப்பை கொடுக்கிறார்.

ஆனால் வட இந்தியாவில் படிக்க வேண்டாம் படிப்பதற்கு கொடுக்கப்பட்ட பணத்தை வைத்து கோயிலை கட்டுகிறேன் என கோடி கோடியாக செலவு செய்து கோயிலை கட்டுகிறார்கள். ஏழை மக்களின் வரிப்பணத்தை வாங்கி மக்களுக்கு கொடுக்காமல் கோயிலை கட்டுகிறார்கள். ஜி.எஸ்.டி. உள்ளிட்ட பல்வேறு வரிகள் மூலம் மத்திய அரசு நமது பணத்தை கொள்ளை அடித்து வட மாநிலங்களில் கொடுக்கிறார்கள் அதற்கு என்ன காரணம் என்றால் வடமாநிலங்களில் உள்ள எம்பி தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் ஆந்திரா தமிழ்நாடு கேரளா கர்நாடகம் பற்றி கவலைப்பட வேண்டாம் அவங்க யாருக்காவது ஓட்டு போடட்டும் வடமாநிலங்களில் நம்ம ஜெயித்து வந்து ஆட்சி நடத்தலாம் என்பதற்காக தான் தொகுதி மறுசீரமைப்பு என்ற திட்டத்தை கொண்டு வர பார்க்கிறார்கள். அதையும் நமது முதலமைச்சர் எதிர்க்கிறார் இன்னொரு முக்கியமானது இந்தி திணிப்பு. இந்தி திணிப்பதை முதன் முதலில் எதிர்த்த மாநிலம் தமிழ்நாடு தான் காரணம் இந்தி வந்தால் தமிழ் அழியும் எனது தாய்மொழி அழியும் எனது தாய் மொழியை விட்டு உன்னை காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை என இந்தி திணிப்பிற்கு எதிராக போராடுகிறோம். நமது மீது இந்தியை திணித்தால் நம் மீது இந்திய திணித்தாள் நாளைக்கு மத்திய அரசாங்கம் நடத்துகின்ற தேர்வுகள் எல்லாம் இந்தியில் நடத்துவார்கள், தாய் மொழியை இந்தியை கொண்டவன் அதிக மார்க்கு வாங்குவானா மூன்றாவது மொழியாக இந்தியை படிக்கும் நம்ம வாங்குவோமா நம்மால் வாங்க முடியாது. இந்தியை தாய் மொழியாகக் கொண்டவன் அதிக மார்க் வாங்குவார்கள். அவர்கள்தான் வேலைக்கு வருவதற்கான வாய்ப்பு ஏற்படும். இதுதான் அவர்களது திட்டம். இதனை கருத்தில் கொண்டு தான் பேரறிஞர் அண்ணா கொண்டு வந்தார் நாங்க தமிழையும் ஆங்கிலத்தையும் படித்துக் கொள்கிறோம் என்று.

அதனால்தான் நமது மாநிலத்தில் பல கிராமங்களில் உள்ள மாணவர்கள் வெளி நாடுகளில் போய் வேலை பார்க்கிறார்கள் என்றால் அது அண்ணா கொண்டு வந்த இருமொழி திட்டத்தால்தான். அதனால்தான் அந்த வழியில் நமது முதலமைச்சர் மிகத் தெளிவாக ஆனித்தரமாக வாதிட்டு ஒன்றிய அரசாங்கத்தை எதிர்த்து வருகிறார் இந்தியாவில் பல முதலமைச்சர்கள் உள்ளார்கள் மோடியை எதிர்த்து தைரியமாக பேசக்கூடிய முதல் முதலமைச்சர் நமது முதலமைச்சர் தான் அவரால் தான் தமிழ்நாட்டை காப்பாற்ற முடியும். தமிழ்நாட்டை காப்பதற்கு நமது முதலமைச்சருக்கு பின்னால் நாம் அணிவகுப்பதற்கான அவசியம் உள்ளது என அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் பேசினார்.




சென்னை, தீவுத்திடலில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பத் துறையின் சார்பில் நேற்று (15.03.2025) நடைபெற்ற நுகர்வோர் விழிப்புணர்வு குறித்து மாணவர் மாணவியருக்கான மராத்தான் ஓட்டத்தினை கொடியசைத்து துவக்கி வைத்து. வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்கு பரிசுகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த. மோகன், மாணவர்கள், மாணவியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை சீர்காழி நகர தி.மு.க. சார்பில் சீர்காழியில் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் ஆர்.டி.சபாபதிமோகன், சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாள நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., ம.சுப்பராயன், பி.எம்.ஸ்ரீதர், ஜி.என்.ரவி, முத்து.மகேந்திரன், கே.ஜி.சீனிவாசன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மகா. அலெக்சாண்டர் மற்றும் பலர் உள்ளனர்.